**தலைப்பு 278 - மாவட்டச் செயலகம், இரத்தினபுரி**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்

(ஆ) கிராமிய மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் உத்தியோகத்தர்கள் மற்றும் அமைப்புக்களினூடாக சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

(இ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பிரதிநிதியாகச் செயற்படல்.

(ஈ) பல்வேறு தலைப்புகளுக்கான வருமானங்களைச் சேகரித்தல்.

(உ) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

(ஊ) மாகாண சபைகளுக்கு அவற்றின் நடவடிக்கைகளின் போது உதவிபுரிதல்.

## 1.2 மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | அயகம | (ஐ) | கிரிஎல்ல | (கு) | வெலிகபொல |
| (ஆ) | எலபாத | (ஒ) | குருவிட்ட | | |
| (இ) | எஹலியகொட | (ஓ) | கொலன்ன | | |
| (ஈ) | எம்பிலிபிடிய | (ஔ) | கொடகவெல | | |
| (உ) | இம்புல்பே | (க) | நிவிதிகல | | |
| (ஊ) | ஓபநாயக்க | (கா) | பெல்மடுல்ல | | |
| (எ) | கலவான | (கி) | பலாங்கொட | | |
| (ஏ) | கஹவத்த | (கீ) | இரத்தினபுரி | | |

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை

2014 யூலை 25 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்ப்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் இரத்தினபுரி மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 726,425,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 718,272,890 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய ஏற்பாட்டில் ரூபா 8,152,110 ஆக அதாவது 1.12 சதவீதம் எஞ்சியிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 635,275,000 | 631,384,194 | 3,890,806 | 0.61 |
| மூலதனம் | 91,150,000 | 86,888,696 | 4,261,304 | 4.67 |
| மொத்தம் | 726,425,000 | 718,272,890 | 8,152,110 | 1.12 |

**(ii) பாதீட்டு முரண்**

02 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டின் 17 சதவீதமாகவும் 37 சதவீதமாகவும் காணப்பட்டது.

**(iii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 26 அமைச்சுக்களிடமிருந்தும் 18 திணைக்களங்களிடமிருந்தும் ரூபா 3,817,778,060 கூட்டுத்தொகையான ஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவ் ஏற்பாட்டில் முறையே ரூபா 1,777,765,254 தொகையும் ரூபா 1,797,917,136 தொகையுமாக ரூபா

3,575,682,390 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மீளாய்வாண்டின் இறுதி வரையில் முறையே ரூபா 196,055,585 தொகையும் ரூபா 46,040,085 தொகையுமாக ரூபா 242,095,670 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அச் சேமிப்புகள் வழங்கப்பட்டிருந்த ஏற்பாட்டின் முறையே 10 சதவீதத்திற்கும் 2 சதவீதத்திற்குமான அளவைக் கொண்டிருந்தன.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| விடய இல. | செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ள படியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 27801 | 52,000,000 | 46,264,156 | 32,000,000 | 36,831,694 | 207,000,000 | 152,922,343 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 27801 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் தினத்தில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,559,337 ஆகக் காணப்பட்டது.

(ii) ரூபா 87,530 கூட்டுத்தொகையான 03 கடன் மீதிகள் சீசீ 10 ஆம் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே அக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 2,900 தொகையான மீதி சீசீ 10 ஆம் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தனியான மீதி வகைப்படுத்தல் பொழிப்பில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுத்தொகைக்கும் அத்திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளுக்கும் இடையே ரூபா 32,421 தொகையான இணக்கம் செய்யப்படாத மீதி காணப்பட்ட போதிலும் அது அத்திகதிக்கு தயாரிக்கப்பட்டிருந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கட்டுநிதிக் கணக்குகள்**

---------------------------------------------------

மாவட்டச் செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய கட்டுநிதி மீதியான ரூபா 136,250 தொகை 2014 யூலை 16 ஆம் திகதி தீர்க்கப்பட்டிருந்தது.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

---------------------------------------------

மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 281,726,892 ஆகக் காணப்பட்டது.

**1.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---------------------------------------------

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

-----------------------------------------------------------------------------------------------

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று குறைவான பயன்பாடுடையனவாக நிலவியமை தெரிவுக் கணக்காய்வின் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 02 பிரதேச செயலகங்களின் 02 கட்டிடங்களும் மாவட்டச் செயலகத்தின் ஒரு வாகனமும் பயன்பாடின்றிக் காணப்பட்டது.

(ii) ஓபநாயக்க பிரதேச செயலகத்தின் களஞ்சியத்தில் பல வருட காலமாகக் காணப்பட்ட பாதுகாப்பு கவசங்கள் 5 பொருட்பதிவில் பதியப்பட்டிராததுடன் 03 ஹியும் குழாய்கள்

எவ்வித பயன்பாடும் இன்றி பல வருட காலமாக அலுவலக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

**(ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

---

பெறுமதி மதிப்பிடப்பட்டிராத ஓர் காணி கஹவத்தை பிரதேச செயலகத்தால் தொலைத்தொடர்பு நிறுவகம் ஒன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

**(இ) வேறு நிறுவகத்திற்கு உரித்தான சொத்துக்கள் பயன்படுத்தப்படல்**

---

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உரித்தான பெறுமதி மதிப்பிடப்பட முடியாத 0.34 ஹெக்டேயர் காணி 1998 ஆம் ஆண்டு முதல் அலபாத்த பிரதேச செயலகத்தால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**1.7 செயற்திட்ட அமுலாக்கலிலான நலிவுகள்**

---

மாவட்டச் செயலகத்தால் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களில் பின்வரும் நலிவுகள் கண்டறியப்பட்டன.

(அ) முறைப்படி செயற்படுத்தப்பட்டிராத செயற்திட்டங்கள்

---

மாவட்டச் செயலகத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் முறைப்படி செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) குருவிட்ட, ஓபநாயக்க, அஹெலியகொட மற்றும் பெல்மடுல்ல போன்ற பிரதேச செயலகங்களால் செயற்படுத்தப்பட்ட 07 கைத்தொழில்களுக்கு உரித்தான கிரயம் ரூபா 622,293 தொகையான 08 வேலை விடயங்களின் மதிப்பிடப்பட்ட வேலைப் பகுதிகள் முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) மாவட்டச் செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்ற ஏற்பாட்டின் மூலம் பனஹெடுவ குளம் மறுசீரமைப்பிற்காக கமநல சேவைகள் உதவி ஆணையாளர் நாயகத்தால் காணி மீட்பு

மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துடன் 2011 நவம்பர் 14 ஆம் திகதி ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இக் கைத்தொழிலுக்கு உரித்தாக செய்யப்படாத வேலைக்காக ரூபா 375,670 தொகையும், அங்கீகரிக்கப்பட்ட விலைக்கு மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 42,258 தொகையாக ரூபா 417,928 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மாவட்டச் செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்ற ஏற்பாட்டில் கோன்கட்டுவஆர குளம் மறுசீரமைப்பிற்காக கமநல சேவைகள் உதவி ஆணையாளர் நாயகத்தால் காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துடன் 2012 பெப்ரவரி 05 ஆம் திகதி ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

அக் குளம் மறுசீரமைப்புத் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2013 நவம்பர் 30 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய இவ் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் 2014 சனவரி 21 ஆம் திகதியளவில் கைவிடப்பட்டிருந்தன. ஆகையால் 1 ½ ஆண்டு காலமாக கோன்கட்டுவஆர குளத்தின் நீர் வெளியேற்றப்பட்டு இருந்தமையால் 2.6 சதுர மைல் போசனைப் பிரதேசத்திலான 95 ஏக்கர் அளவிலான வயல் நிலங்கள் பயிரீட்டிற்காக தேவையான நீர் வழங்கல் வழங்கப்படுவது தடைப்பட்டிருந்தது.

- ஒப்பந்தக்காரருக்கு 2012 ஆகஸ்ட் 15 ஆம் திகதி முற்பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 1,904,000 தொகையில் 2014 சனவரி வரையில் ரூபா 1,025,274 தொகை மேலும் அறவிடப்படுவதற்கு இருந்தது.

**(ஆ) பயனற்ற செலவினங்கள்**

செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பயனற்ற செலவினமாகக் கண்டறியப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சில பின்வருமாறாகும்.

(i) கொடக்கவெல கலாச்சார மத்திய நிலையத்தின் பழுதுபார்ப்பிற்காக 2009 ஆம் ஆண்டின் போது கலாச்சார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,954,332 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஒக்டோபர் மாதமளவில் கட்டிடத்தைச் சுற்றி பற்றைகள் வளர்ந்து பயன்பாடின்றிக் காணப்பட்டது. மின்விசிறிகள் மற்றும் ஏனைய பொருத்திகள் கழற்றிக் கொண்டுசெல்லப்பட்டிருந்தன. கட்டிடத்தின் ஒரு திறப்பு வெளித்தரப்பினரிடம் காணப்பட்டதுடன் தற்போது இது சமூக விரோதச் செயல்கள் நடைபெறும் பகுதியாகக் காணப்பட்டது.

(ii) கஹவத்தை கலாச்சார மத்திய நிலைய நிர்மாணிப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நிலத்தின் நிலப்பாடு தொடர்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தின் பரிந்துரை பெறப்படாமையும், நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து அந் நிலப்பகுதியில் நிலவிய மண்சரிவு ஏற்படும் என்ற இடரின் அடிப்படையில் அந் நிறுவகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் 2013 திசெம்பர் மாதமளவில் நிர்மாணிப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களும் எவ்வித நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. இதனால் உரிய நோக்கம் எய்தப்பட்டிராததுடன் செலவிடப்பட்ட ரூபா 1,014,854 தொகை விளைவற்றுக் காணப்பட்டது.

(iii) குருவிட்ட பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ விடுதிக்காக வரும் வழியைப் பதனிடுவதற்கு குருவிட்ட பிரதேச சபையின் வீதிப் பதனீட்டு போக்குவரத்துச் செலவினமொன்று இல்லாமல் பயன்படுத்தப்படக் கூடிய நிலை இருக்கையில் இதற்காக ரூபா 10,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(iv) ஓபநாயக்க கலாச்சார மத்திய நிலைய நிர்மாணிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 03 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் நிர்மாணிப்புகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தமையால் சூழ உள்ள பகுதியில் பற்றைகள் வளர்ந்து கட்டிடங்கள் எவ்வித பயன்பாட்டிற்காகவும் எடுக்கப்பட முடியாத நிலையில் காணப்பட்டன. இதனால்,

இதற்காகச் செலவிடப்பட்ட ரூபா 2,859,309 தொகை விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) செயற்பாட்டு நலிவுகள்

------------------------------------

மாகாண வீதி காபட் இடும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் வீதி காபட் இடப்படுவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பெற்றுக்கொண்ட ரூபா 440,000,000 தொகையான ஏற்பாட்டின் மூலம் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 267,334,490 தொகை செலவிடப்பட்டு 52 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உடன்படிக்கையின் பிரகாரம், 2012 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 06 மாதங்களுக்குள் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 5,890,465,581 தொகையான 52 செயற்திட்டங்கள் 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னேற்ற அறிக்கையின் படி முற்றாக வேலை பூர்த்திசெய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த 03 செயற்திட்டங்களின் தூரம், உடன்படிக்கையின் படி உடன்பட்ட தூரத்தைப் பார்க்கிலும் 0.19 கிலோ மீற்றர் குறைவாகக் காணப்பட்டது. செய்யப்படாத அவ் வேலைகளின் பெறுமதி ரூபா 3,117,903 ஆகக் காணப்பட்டது.

(iii) இச் சகல செயற்திட்டங்களினதும் நிர்மாணிப்பிற்காக இடமளிக்கப்பட்ட காலம் 2014 மார்ச் 31 ஆம் திகதி பூர்த்தியடைந்திருந்த போதிலும் மீள காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட பதிவேட்டிற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து தேவையான அங்கீகாரம் பெறப்படாது 19.14 கிலோ மீற்றர் தூரம் குறைக்கப்பட்டிருந்தது.

(iv) 2014 பெப்ரவரி 28 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் படி, 06 செயற்திட்டங்களின் வேலை பூர்த்தி செய்வதற்காக ரூபா 293,144,779 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அவற்றின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 467,387,712 ஆகக் காணப்பட்டது. இதனால் ஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 174,242,923 ஆகக் காணப்பட்டமையால் மிகை மதிப்பீடு தயாரிக்கும் சதவீதம் பூர்த்திசெய்யப்பட்ட வேலைப் பெறுமதியுடன் ஒப்பிடப்படுகையில் 59 சதவீதமாகக் காணப்பட்டது.

(v) 02 ஆண்டுகளுக்கு மேல் காலம் கடந்திருந்த எனினும், வேலை பூர்த்தி செய்யப்படாத 05 செயற்திட்டங்களின் நிர்மாணிப்புகள் பூர்த்தி செய்யப்பட்ட சதவீதம் 2014 பெப்ரவரி 28 ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்த முன்னேற்ற அறிக்கையின் படி, 40 சதவீதமாகக் காணப்பட்டது. எவ்வாறெனினும், மதிப்பிடப்பட்ட தொகையும் செலவிடப்பட்ட தொகையும் முறையே ரூபா 623,279,440 தொகையாகவும், ரூபா 43,360,011 தொகையாகவும் காணப்பட்டமையால் அவற்றின் நிதி முன்னேற்றம் 7 சதவீதத்தைப் பார்க்கிலும் குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது.

## 1.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திற்காக 60 உருக்கு மேசைகளும் 23 உருக்கு அலுமாரிகளும் கொள்வனவு செய்யப்படுவதற்காக வழங்குனரால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி சமர்ப்பிக்கப்பட்ட பொருட்களுக்கும் வழங்கலின் போது பூர்த்தி செய்யப்பட்ட தகடுகளின் தடிப்பம் 13 சதவீதத்தால் குறைவடைந்து காணப்பட்டது. அது அளவீட்டு அலகு தரம் மற்றும் சேவைகள் திணைக்கள உத்தியோகத்தராலும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இதனால், தரத்தில் குறைவான பொருள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 1,140,675 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 1.9 முகாமைத்துவ நலிவுகள்

கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரத்தினபுரி மாவட்டத்தின் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் ஒரு வீட்டிற்கு 10 கோழிக்குஞ்சுகள் வீதம் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்பாட்டின் மூலம் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 8,806,900 தொகை இரத்தினபுரி மாவட்டச் செயலகம் செலவிட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

(i) 2011 ஒக்டோபர் முதல் 2012 நவம்பர் வரை சப்ரகமுவ மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திலிருந்து ரூபா 400 படி 17,971 கோழிக் குஞ்சுகள் விலை மனுக் கோரப்படாது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. மாவட்டச் செயலகத்தின் கொள்வனவுக் குழுவால் 2012 நவம்பர் 21 ஆம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி ஒரு கோழிக்குஞ்சு ரூபா 345 இற்குப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்தது. இதன் படி, வரிசை அமைச்சின் தீர்மானத்தால் மேலதிகமாகச் செலுத்த நேர்ந்த பணம் ரூபா 988,405 ஆகக் காணப்பட்டது.

(ii) இதற்காக எவ்வித விலை மனுவும் கோரப்பட்டோ அல்லது உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டோ இருக்கவில்லை.

(iii) இச் செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது மாவட்டச் செயலக கட்டிடத் தொகுதியின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 118,900 தொகையான மாதாந்தக் கட்டணத்தை முன்வைத்த நிறுவகத்திற்கு கொள்வனவுக் கோரல் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கேள்வி மதிப்பிடப்படுகையில் ஆகக் குறைந்த விலையை சமர்ப்பித்த நிறுவகத்தால் குப்பைகள் அகற்றப்படும் இடம் மற்றும் அகற்றப்படும் காலப்பகுதி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கையில் அதில் குப்பைகளை அகற்றும்

முறை ஒன்று இல்லை எனவும், கொள்வனவுக் கோரல் வழங்கப்பட்டிருந்த நிறுவகத்தால் அத்தகைய முறை குறிப்பிடப்பட்டிராத போதிலும் அதில் குப்பைகளை அகற்றும் முறை ஒன்று உண்டு எனவும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ii) சேவை உடன்படிக்கையின் 05 ஆம் பந்தியின் படி, மூன்று ஆண்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் சேவை ஒப்பந்தம் முடிவுறும் வரையில் இரு ஆண்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 1.10 நட்டங்களும் இழப்புகளும்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகக் காணப்பட்டது.

(அ) அஹெலியகொட பிரதேச செயலக அலுவலகத்திற்கு உரித்தான ஓர் கெப் வண்டி 2010 ஏப்ரல் மாதம் அப்போதைய செயலாளரின் சொந்த வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளையில் தீப்பற்றியிருந்தது. இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் செயற்பட்டிராமை கணக்காய்வின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தமையால் விபத்து நேர்ந்து 38 மாதங்களின் பின்னர் 2013 யூன் மாதம் ஆரம்ப அறிக்கை வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) குருவிட்ட பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் செல்லும் பாதையையும் குருவிட்ட பஹலகம பௌத்த வித்தியாலயத்தின் நிலப்பகுதியையும் கொங்கிரீட் இடப்படுகையில் ரூபா 24,875 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 1.11 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 59 | 47 | 12 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 162 | 186 | 14 | 38 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,079 | 830 | 204 | 05 |
| (iv) | ஆரம்ப நிலை | 173 | 172 | 10 | 09 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 1,423 | 1,236 | 240 | 53 |

1992 ஆம் ஆண்டின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.